Registered as a NewsPaper

விலை ரூபா-07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் -15 | 28-03-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -039

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வன்னக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்.
அனைத்திற்கும் பொற்காலம்
வன்னக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
(சி-9407)
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி

# மட்டு. அரசாங்க அதிபர் படுகாயம்

## மட்டு. பிள்ளையாரடிச் சந்தியில் உந்துருளியில் சென்றோர் துப்பாக்கிச்சூடு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் அம்மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அதிகாரியுமான தி.மோனகுருசாமி நேற்று மாலை இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். வாகனத்தில் சென்றுகொண்டிருந்த அவர்மீது மட்டு. பிள்ளையாரடி சந்தியில் வைத்து உந்துருளியில் வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம்செய்துள்ளனர்.**

நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அரச அதிபரின் தலையிலும், கையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக உலங்கு வானூர்தி மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அரசஅதிபர் மோனகுருசாமி அபாய நிலையைத் தாண்டிவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(32)

## ஆயிரத்தைத் தாண்டி தேர்தல் வன்முறைகள்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நேற்றுவரை தேர்தல் வன்முறைகள் ஆயிரத்தையும் தாண்டிவிட்டதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (32)

## தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

வரும் ஏப்ரல் 8ம் திகதிவரை ரூபவாகினி, சுயாதீனத் தொலைக்காட்சி சேவை இரண்டும் தனது அறிவுறுத்தலுக்கு ஏற்ப நடந்து கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் பணித்துள்ளார்.

மேற்படி இரு தொலைக்காட்சிகளும் ஐ.தே.முன்னணிக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரங்களை மேற்கொண்டதாகத் தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.முன்னணி உறுப்பினர்கள் மலிக் சமரவிக்கிரமவுக்கும், ரவி கருணா நாயக்காவுக்கும் முறையிட்டிருந்தனர். இதனை விசாரித்த தேர்தல் ஆணையாளர் மேற்படி உத்தரவிட்டுள்ளதுடன் இதனை மீறும் பட்சத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## குழுமோதலில் மூவர் படுகாயம்

(அலுவலகசெய்தியாளர்)

பரந்தன் பகுதியில் நேற்று இரண்டு குழுக்களுக்கிடையே இடம் பெற்ற மோதலில் மூவர் காயமடைந்து கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5.00 மணியளவில் பரந்தன் ஐந்தாம் ஆம் வாய்க்கால் பகுதியில் ஏற்பட்ட இச்சம்பவத்தின் போது நடராசா

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொலிசதிகாரிக்கு இடமாற்றம்

ராகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சனாதிபதியின் உத்தரவுக்கிணங்க திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா இந்த மாற்றத்திற்கான கடிதத்தை நேற்று முன்தினம் வழங்கியுள்ளார் ஆறு வருடங்களாக இப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய அஜித் தர்மபால என்பவரை உடனடியாக இடமாற்றம் செய்துவிட்டு பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார்

ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவாக மேற்படி பொலிஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிச்சூடு

### கழுத்தில் காயமடைந்து கொழும்பு மருத்துவமனையில் அனுமதி

(கொழும்பு)

முன்னாள் இந்துக்கலாச்சார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போது கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க.சார்பில் போட்டியிடுபவருமான தி.மகேஸ்வரன் நேற்று இரவு இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

நேற்று மாலை 7.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கழுத்துப்பகுதியில் காயமடைந்த மகேஸ்வரன் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் கொழும்பு கொட்டாஞ்சேனை ஜிந்துப்பிட்டியில் தனது பிரச்சாரக் கூட்டத்தை முடித்துக் கொண்டு விவேகானந்தமேடு எனும் இடத்தில் அமைந்துள்ள அன்னை வேளாங்கன்னி சிலைக்கு வணக்கம் செலுத்துவதற்கு காரில் இருந்து இறங்கும்போது பின்னால் இருந்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இவரது பாதுகாப்புக்கு ஆறு பொலிசார் அமர்த்தப்பட்டிருந்தபோதும் துப்பாக்கிதாரரை

(8ஆம் பக்கம் பார்க்க)

## 12வயது சிறுமி மீது ஈ.பி.டி.பி. உறுப்பினர் பாலியல் வல்லுறவுக்கான துன்புறுத்தல் முயற்சி

நேற்று மதியம் கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருவர் கரம்பொன் சிறியபுஸ்பம் மகளிர் கல்லூரியில் இருந்து வீடு திரும்பும் வழியில் அருகிலிருந்த பற்றைக்காட்டிற்குள் இழுத்துச் செல்லப்பட்டு ஊர்காவற்றுறை ஈ.பி.டி.பி. உறுப்பினர் கிருபா என்பவரால் பாலியல் வல்லுறவுக்கான துன்புறுத்தல் முயற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவத்தை அறிந்த ஊரவரும், உறவினர்களும், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டுள்ளனர். இதேவேளை பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையால் பொலிசாரிடம் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டை வாபஸ் பெறும்படியும் அல்லது பாரியவிளைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. முக்கியஸ்தருமான மதனராஜனால் சிறுமியின் பெற்றோர் தொடர்ந்தும் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இச்சம்பவம் இப்பகுதி மக்களின் மன உணர்வுகளில் பெரும் பாதிப்பையும் கோபாவேசத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (33)

## ஈ.பி.டி.பி.உறுப்பினர் மீது கொழும்பில் துப்பாக்கிச்சூடு

### காயமெதுவுமின்றித் தப்பினார்

ஈ.பி.டி.பி சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தை மல்லினலேன் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிரேஷ்ட உறுப்பினரான கந்தையா சங்கரன் என்பவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது அவர் எந்தவித காயமும் இன்றி தப்பித்துக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

## கடற்படைப்படகு மோதி காணாமல் போன மீனவர் சடலமாக நேற்று கண்டுபிடிப்பு

வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்படைப் படகு மோதியபோது காணாமல் போன மீனவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி இரவு வடமராட்சிக் கடற்பரப்பில் படகு ஒன்றில் மூன்று மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை, சிறிலங்கா கடற்படையினரின் விசைப்படகுஒன்று மீனவர்படகைமோதி நொருக்கியதில்ஒருவர் காணாமல் போன

(8ஆம் பக்கம் பார்க்க)

## கைதடிப்பகுதிச் சம்பவத்திற்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்புமில்லை

### -யாழ். மாவட்ட அரசியல்துறையினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற சம்பவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என யாழ். மாவட்ட அரசியல் துறையினர் நேற்றுவிடுத்தஅறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு.நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதையும், பொதுத்தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ள கட்சிகள்எவ்விதஇடையூறுமற்ற வகையில் பிரச்சாரப்பணிகளில் ஈடுபடுவதையும் சனநாயக உரிமைகளின் உன்னத வெளிப்பாடாகவேதமிழீழ விடுதலைப்புலிகளாகிய நாம் கருதுவதோடு எமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றோம்.

தமிழ் மக்களது சனநாயக உரிமைகளுக்கு குந்தகம் விளைவித்து கடந்த காலங்களில் இருந்து துரோகம் இழைத்து வரும் ஈ.பி.டி.பி கும்பலும் இன்னும்சில குறுக்குவழியாளர்களும்

(8ஆம் பக்கம் பார்க்க)

### -புதுக்குடியிருப்புப் பகுதியில்-

## வாகனம் தடம்புரண்டது வாகனச்சாரதி பரிதாபமரணம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதியில் இரணைப்பாலை பகுதியில் ஹையேஸ் ரக வாகனம் ஒன்றுநேற்றுக்காலைதடம் புரண்டதில் அதனைச்செலுத்தி சென்ற சாரதி அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 5 ஆம் வட்டாரம் இரணைப்பாலையை வதிவிடமாகக் கொண்ட கந்தையா

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### உயர்தர வகுப்புக்கள்ஆரம்பம்

(பொன்னம்பலம் வைத்தியசாலை பரவிப்பஞ்சான்)
க.பொ.த.(உ/த) வகுப்புக்கள்

2006ம் ஆண்டுக்கான கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக பிரிவுகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு 31.03.2004 புதன் கிழமை மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளது என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம். நிர்வாகி. (4405)

### N.E.C

A9 வீதி கிளிநொச்சி

A/L- 2006ற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்கலைப்பிரிவு:-28.03-12 மணிக்கு வர்த்தகப்பிரிவு:- 28.03- மூன்று மணிக்கு கணித, விஞ்ஞானப்பிரிவு:-28.03.2004 1மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (4229)

### தவறிவிட்டது

செ.சதாசிவம் என்பவருடைய இரண்டு அ.அட்டைகள் ஆனையிறவுக்கும், இயக்கச்சிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் (4403)


# வன்னிப்பகுதி மக்கள் சோதனை எதுவுமின்றி வாக்குச்சாவடிக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்

## வன்னி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கணேஷ் அறிவிப்பு

(வவுனியா)

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் எவரும் சோதனை பதிவு எதுவும் மேற்கொள்ளாமல் நேரடியாக வாக களிக்க அனுமதிக்கப்படுவர் இவ் வாறு வன்னி தேர்தல் தெரிவு அத் தாட்சி அதிகாரி கே.கணேஷ் தெரி வித்தார். வவுனியா அரச செயல கத்தில் வன்னி தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக சகல தரப்பினரையும்சந் தித்துகலந்துரையாடும் போது அவா மேலும் தெரிவித்ததாவது. 2 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு வாக் களிப்புஆரம்பமாகும். மக்கள் அனைவரும் புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதியில் இருந்து ஏற்றி வரப்பட்டு இராணுவச்சோதனைச் சாவடியில் இறக்கி சோதனை செய்யப்படமாட்டார்கள் அத்துடன் பொலிசார் பதிவு எதனையும் மேற்கொள்ளமாட்டார்கள். வாக்க ளிக்க வருபவர் வாக்காளர் அட்டை கொண்டு வரவேண்டும் என்ற கட் டாயம் இல்லை. எனினும் அவர்க ளின் இலக்கம் தெரிந்திருக்க வேண்டும். வாக்களிக்க வருபவர் களில் சந்தேகம் ஏற்பட்டால் கட்சி யின் அபேட்சகர் ஆட்சேபனை யினை தலைமை அதிகாரியிடம் தெரிவிக்கும் பட்சத்தில் அவர் தொடர்பாக விசாரணை செய்து நடவடிக்கையை எடுப்பார் என்று தெரிவித்தார். மேலும் இதன் படி இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி யைச் சேர்ந்த மக்களுக்கு ஓமந் தைப்பகுதியில் வாக்களிக்க வவு னியா மாவட்டத்திற்குரிய 12 நிலை யங்களும் முல்லைத்தீவு மாவட் டத்திற்குரிய 49 வாக்குச் சாவடிகளும் மன்னார் மாந்தைப்பிர தேசத்திற்கான வாக்குச்சாவடிகள் 12 உயிலங்குளத்திலும் மடு வீதியில் 4சாவடிகளும் கொத்தணி சாவடி முறையில் அமைக்கப் படுகிறது. இதன்மூலம் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்த 80,819பேர் வாக்களிக்க உள்ளனர். அத்துடனமக்கள் பயணிப்பதற்காக 80 பேருந்துகளும் பாவிக்கப்பட வுள்ளன என்றார். இந்த கூட்டத் திற்கு வன்னி இராணுவ கட்டளை அதிகாரி சிசிர விஜயசூரிய டி.ஐ.ஜி மலிந்தவெத்தேவல, எஸ்.எஸ்.பி மிஸ்கின், ஐ.சி.ஆர்.சி, எஸ்.எல். எம்எம் ஐரோப்பிய யூனியன், பெடரல், வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் வவுனியா முல்லைத்தீவு மன்னார் அரச அதிபர்களும் கட்சிகளின் முதன்மை வேட்பாளர் களும் கலந்து கொண்டனர். (21)

# வடமராட்சி கிழக்கில் பல்கலை மாணவன் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பிரச்சாரம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் இராணு வக்கட்டுப்பாடற்ற 10கிராம அலு வலர் பிரிவில் உள்ள மக்களுக்கு வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரச் சாரத்தினை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்க் கூட்டமைப் புக்கு ஆதரவாகவும் அதன் வீட்டுச் சின்னத்துக்கு வாக்கு போடும்படியும் வாக்கு எப்படி அளிப்பதென்பது சம்பந்தமாகவும் இவர்கள் விளக்கி வருகின்றார்கள். இப்பிரச்சாரமானது கடந்த திங்களில் இருந்து நடைபெற்று வருகின்றது. அத்துடன் பிரச்சாரம் வீதி நாடகத்தினையும் மேற் கொண்டு வருகின்றனர்.(11)

## வருடாந்த உற்சவம்

(மல்லாவி)

மல்லாவி யோகபுரம் சிவன் கோயில் வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து நடைபெறவருகின்றது. இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா 3ஆம் திகதியன்றும்தீர்த்தம் 4ஆம் திகதி அன்றும் நடைபெறும்.(24)

# வாக்களிக்க வருகின்ற மக்களுக்கு தங்குமிடம் அமைக்க நடவடிக்கை

(வடமராட்சி)

கிளிநொச்சி தேர்தல் தொகு தியிலிருந்து முகமாலை சூனி யப்பிரதேசம் ஊடாக இராணுவ கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் அமைக் கப்படவுள்ள கொத்தணி வாக்க ளிப்பு நிலையத்தில் வாக்களிக்க வருகின்ற மக்களை தங்கவைப் பதற்கான இடங்களையும் அதன் ஒழுங்குகளையும் கிளிநொச்சி அரசஅதிபர் இராசநாயகம் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அதற்கான இடங்களை துப்புரவு செய்து குடிநீர் மலசலகூடங்கள் அமைப்பு சம்பந்தமான நடவடிக் கையினை பச்சிலைப்பள்ளி பிர தேச சபையினர் மேற்கொண்டு வரு கின்றனர். அந்த வகையில் பளைப் பகுதியில் உள்ள பொதுக் கிண றுகள் இறைக்கப்பட்டு சுத்தம் செய்யப்படுவதையும் காணக் கூடிய தாய் உள்ளது. இப்பகுதியில் உள்ள பொதுக்கட்டடங்கள் பாட சாலை கள், கோயில்கள் போன்ற இடங்க ளில் வரும் மக்கள் தங்கவைக்கப் படுவர் என்று தெரிவிக்கப்படுகின் றது. அந்த வகையில் இயக்கச்சி தொடக்கம் பளைநகர் வரையான பகுதிகளில் மக்கள் தங்க வைக்கப் படுவர் இப்பிர தேசத்துக்கு 50,000க்கு மேற்பட்ட மக்கள் வருவார்கள் என்றும அதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. (11)

## கோழி நோய்களுக்கு தடுப்பு மருந்து வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விலங்கு வேளாண் மைப் பகுதியினரால் வவுனியா மாவட்ட பிரதேசங்களில் உள்ள கோழிகளுக்கு கோழி நோய்த் தடுப்பு மருந்து கடந்த 16ந் திகதி முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

வரும்முன் காக்கும் நடவடிக் கையாக ரனிகட் நோய் தடுப்பு மருந்து இதுவரை சுமார் 1000 கோழிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தெனவும் மேலும் தொடர்ந்து இத் தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பெறுமென தமிழீழ பொருண்மிய நிறுவனத் தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# தமிழ் மக்களின் மானம் காப்பதற்கு வீட்டுச் சின்னத்துக்கே வாக்களியுங்கள்

## மன்னார் மாணவர் ஒன்றியம் கோரிக்கை

மன்னாரில் மாணவர் ஒன்றியம் எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு மன்னார் மக்களுக்கு ஓர் அறிக்கையை விடுத்துள்ளது. அதில் தமிழர் தாயகம், தேசியம் தமிழரின் சுயநிர்ணய உரிமை போன்றவற்றை வலியுறுத்தி அனை வரும் தமது பொன்னான வாக்கு களை தமிழ்க்கூட்ட மைப்பிற்கே அளிக்க வேண்டுமெனவும் தமிழ ராகிய நாம் பெரும் சக்தியாக அணிதிரண்டு வெற்றி கொள்வதன் மூலம் சர்வதேச சமூகம் எம்மைப் பார்த்துவியக்க வேண்டுமெனவும் எனவே தமிழ் மக்கள் தமிழரின் மானம் காக்க வீட்டுச்சின்னத்தையே ஆதரிக்குமாறு வேண்டியுள்ளார்கள். (மி)

# க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

மல்லாவி மு.யோகபுரம் மகாவித்தியாலயம் 2003 க.பொ.த சாதாரணப்பரீட்சையில் தோற்றி சிறப்புச்சித்தியெய்திய மாணவ மாணவிகளின் பெயர் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. செல்வன் நா.துளசிதாஸ் 6ஏ 2பி 2எஸ், செல்வன் கு.றேகன் 6ஏ 2பி 1சி, செல்வி இ.ரஜிவனா 5ஏ 4பி 1எஸ், இ.ஷாந்தினி 5ஏ பி 3சி எஸ். (24)

# துணுக்காய் கோட்ட மட்டத்தில் மல்லாவி ம.க.முதலிடம்

(மல்லாவி)

துணுக்காய் கோட்டமட்ட தடக ளப்போட்டி மு/மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் துணுக் காய் கோட்டக்கல்வி அலுவலர் ஆ.சுந்தரமூர்த்தி அவர்களின் தலைமையில் 22, 23ஆம் திகதி களில் நடைபெற்றது. கூடிய புள்ளி களைப் பெற்று மல்லாவி மத்திய கல்லூரி 01ஆம் இடத்தையும், யோகபுரம் மகாவித்தியாலயம் 02ஆம் இடத்தையும், துணுக்காய் அ.த.க.பாடசாலை 03ஆம் இடத் தையும் பெற்றுக்கொண்டுள்ளன என பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவிக்கின்றார். (24)

# மன்னாரில் கூட்டமைப்புக்கு ஆதரவான பிரச்சாரம் தீவிரம்

(மன்னார்)

மன்னாரில் தமிழ்க் கூட்ட மைப்பினருக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. பல்வேறு இடங்களில் கூட்டங்கள் நடைபெற்றுவருவதுடன் வீடுவீடாகச் சென்று ஆதரவு தேடும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இதேவேளை மன்னார் இராணு வக்கட்டுப்பாடற்ற பகுதியில் வாழும் மக்களை சூனியப் பிரதேசத்திற் கருகே அமைக்கப்பட்டுள்ள வாக்க ளிக்கச் செய்ய தேவையான விசேட போக்குவரத்துவசதிகளை ஏற்படுத் தும் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன. (மி)

# முள்ளியவளைப் பிரதேசத்தில் வயல் விழாவும் அறுவடைநிகழ்வும்

(அலுவலகசெய்தியாளர்)

விவசாயத் திணைக்களமும் வன்னிவேளாண் தொழில் நுட்ப நிறுவனமும் இணைந்து நடாத்திய அதியுயர் விளைச்சலுக்கான முன்மாதிரிச் செய்கையின் வயல் விழாவும் அறுவடைநிகழ்வும் கடந்த 25ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட முள்ளியவளை குஞ்சுக்குளம் பிரதேசத்தில் நடைபெற்றது.

விவசாயப் போதனாசிரியர் வே.சண்முகப்பிரியா தலைமையில், லோகீஸ்வரன், அருளானந்தசிவம் ஆகியோரின் வயலில் விமரி சையாக நடைபெற்ற இந் நிகழ்வில் ஆரம்பில், குமுழமுனை விவ சாயப் போதனாசிரியர்கள், வன்னிவேளான் தொழில் நுட்ப நிறுவன துறைசார் பொறுப் பாளர் கள் மற்றும் முன்மாதிரிச் செய்கை விவசாயிகள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)


உ
சிவமயம்

"அம்பிகை திருவருள் நாடெங்கும் பாலிக்குக"



குஞ்சுப்பரந்தன்
அருள்மிகு பொறிக்கடவை
அம்மன் ஆலய



பங்குனித்திங்கள் வேள்வி விழா - 2004

நிகழும் சுபானு வருடம் பங்குனி மாதம் 16ஆம் நாள் (29-03-2004)திங்கட்கிழமை

பகல், இரவு, மறுநாள் அதிகாலை வரை

வழமைபோல் அதிசிறப்பாக வேள்வி விழா நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

- பகல் அபிஷேக ஆராதனைகள், கொடியேற்ற வைபவம், விசேட பூசை
- மகேஸ்வர பூசை(அன்னதானம்)
- பகல் இரவு முழுநாளும் காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டிநேர்த்தி, பறவைக்காவடி சிறப்புநிகழ்ச்சிகள்.
- இரவு அம்பிகை வீதி உலா வருதல்
- அதிகாலை விசேஷ பூசை
- பொங்கல், தீக்காவடி மிதிப்பு
- நீர்ச்சோறு வழங்கல்

அடியார்கள் அனைவரும் வேள்வி தினத்தில் ஆலய தரிசனம் செய்து அம்பாள் அருள்பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
ஆலய அறங்காவலர்
சபையினர்.


பொறிக்கடவை
குஞ்சுப்பரந்தன், (4404)

# பலூஜா நகரில் அதிரடித் தாக்குதல் 15 அமெரிக்கப் படையினர் பலி!

## -ஐம்பது பேர் காயம்

ஈராக்கில் பலூஜா நகரில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற தாக்குதலில் அமெரிக்கப்படையினர் 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் 50 பேர் காயமடைந்துள்ளனர்.ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப்படையினர் மீது றிக்றிட் நகரைச் சேர்ந்த இஸ்லாமிய குழு இத்தாக்குதலை நடத்தியுள்ளதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் அமெரிக்கப்படையினர் மீது அண்மைக்காலத்தில் நடத்தப்பட்ட பெரிய தாக்குதலில் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது.மேலும் தாக்குதல் நடந்த பகுதியில் அமெரிக்கப் படையினர் சுற்றி வளைப் புத் தேடுதல்களை நடத்திய தாகவும் தெரி விக்கப் படுகின்றது.



வட ஈராக்கின் கிருக் நகரில் எண்ணெய் குழாய் வெடித்ததில் சேதமுற்ற ட்ரக் வண்டி. (வெடிப்புக்கான காரணம் அறியப்படவில்லை.)

## தீவிரவாத தாக்குதல் 20 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவின் மத்திய பகுதியில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் உயிரிழந் தவர்களில் அதிகமானோர் முஸ்லிம்கள் எனதெரிய வருகிறது.

# செப்ரெம்பரில் ஆப்கான் பொதுத் தேர்தல்கள் ஐ.நா.வின் பரிந்துரை சனாதிபதியால் ஏற்பு

## -உதவி நடவடிக்கைக்காலமும் நீடிப்பு



ஹமாஸ் மதத் தலைவரின் படுகொலையைக் கண்டித்து துருக்கியின் ஸ்தான்புல் நகரில் ஆக்ரோஷமான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இஸ்லாமியர்கள்.

**ஆப்கானிஸ்தானில் பொதுத் தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளன. ஐ.நா.வின் பரிந்துரைக்கமைய எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் சனாதிபதி மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல்களை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

ஆப்கானிஸ்தானில் ஜுன்மாதம் நடைபெறவிருந்த தேர்தலை செப்ரெம்பர் மாதம் நடத்துவதற்கு ஐக்கிய நாடுகளும் அதிகாரிகளும் சனாதிபதியும் இணங்கியுள்ளனர்.

தலைநகர் காபூலில் சனாதிபதியின் பேச்சாளர் ஒருவர் கருத்து தெரி விக்கையில் கடந்த புதன் கிழமை சனாதிபதி தலைமையில் கூட்டம் நடைபெற்றதாகவும் அதில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சமர்ப்பித்த மூன்று பிரேரணைகள் ஆராயப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அப்பிரேரணைகளின் விபரம் வருமாறு; ஜுலை மாதத்தில் சனாதிபதித் தேர்தலும், செப்ரெம்பர் மாதத்தில் பொதுத்தேர்தலும் நடத்தப்படவேண்டும் என்பது முதலாவது பிரேரணையாகும். அத்துடன் செப்ரெம்பர் மாதத்தில் இரு தேர்தல்களும் சமகாலத்தில் நடத்தப்பட வேண்டும் என்று இரண்டாவது பிரேரணையாகும். செப்ரெம்பர் மாதம் சனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலும் இடம் பெற வேண்டும் என்பது மூன்றாவது பிரேரணையாகும். இம்மூன்று பிரேரணைகளில் இரண்டாவது பிரேரணையாகும் கூறப்பட்டுள்ள விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆப்கானிஸ்தானிலுள்ள ஐக்கியநாடுகள் உதவி வழங்கும் அமைப்பின் நடவடிக்கைகள் 2005 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் பாதுகாப்புச் சபை அறிவித்துள்ளது.

அதேவேளை ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள 13 ஆயிரம் அமெரிக்கப்படைக்கு உதவும் வகையில் மேலும் 2000 அமெரிக்கக் கடற்படைவீரர்கள் காபூலுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளமை தெரிந்ததே.

## அமெரிக்க அணுக் கொள்கையுடன் தென்கொரியா இணக்கம்

அமெரிக்காவின் சர்வதேச அணுக்கொள்கையுடன் இணைந்து செயற்பட தென்கொரியா இணக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் அமெரிக்கா,ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான அணுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த தென்கொரியா இதனை ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது.

06 நாடுகள் பங்குபற்றிய பேச்சுவார்த்தைகளின் வெற்றியே இதுவென அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க விமானங்கள் எப்பகுதியிலும் தரையிறங்க பாகிஸ்தான் அனுமதி!

## கராச்சி துறைமுகத்தையும் பயன்படுத்த இணக்கம்

அமெரிக்காவின் விமானங்கள் பாகிஸ்தானின் எப்பகுதியிலும் முன் அனுமதியின்றி தரையிறங்க பாகிஸ்தான் அரசாங்கம் அனுமதிவழங்கியுள்ளது.

அதாவது பாகிஸ்தானின் ஐந்து விமானத்தளங்களை அமெரிக்கா பயன்படுத்த பாகிஸ்தான் அரசு பூரண இணக்கம் காட்டியுள்ளது.

பாகிஸ்தானில் பதுங்கியுள்ள அல்-ஹைதா தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கான அமெரிக்காவின் நடவடிக் கைகளுக்குப் பாகிஸ்தான் பூரண ஒத்துழைப்புத் தருகின்றது. பாகிஸ்தான் எல்லைக்குள் அமெரிக்கக் கூட்டுப்படைகள் மூன்றில் இரு பங்கு வான் வெளியைப்பயன்படுத் தவும் அனுமதியளித்துள் ளது.

இதேபோல் கராச்சி துறைமுகத்திலும் அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் வந்து நிற்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் படைகளுக்கு தினந்தோறும நாலு இலட்சம் லீற்றர் எரிபொருளையும் பாகிஸ்தான் வழங்கவுள்ளது.

இதேவேளை பாகிஸ்தானுக்கு நேட்டோ (வட அட்லாண்டிக் உடன்பாட்டு அமைப்பு) சாராத தோழமை நாடு எனும் அந்தஸ்தினை அமெரிக்கா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் பயங்கரவாத ஒழிப்பில் அமெரிக்காவுக்குத் துணை புரிவதன் மூலம் பாகிஸ்தானுக்கு 2001 முதல் 45 ஆயிரம் கோடி செலவாகியுள்ளது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

## அடுத்தமாதம் சந்திப்பு

மத்திய கிழக்கில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அமெரிக்க சனாதிபதி புஷ் இஸ்ரேல் எகிப்து, யோர்டான் ஆகிய நாடுகளின் தலைவர்களை அடுத்த மாதம் சந்திக்கவுள்ளாரென வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது.

# பிரதமருடன் இணைந்து ஜெயலலிதா தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம்

## தனிமனித சுதந்திரத்தைக் காக்க வேண்டுகை

(சென்னை)

தமிழகத்தில் பிரதமர் வாஜ்பாயும் முதலமைச்சர் ஜெயலலிதாவும் இணைந்து பிரச்சாரம் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

இதனை பாரதிய ஜனதாக் கட்சி தேசியச் செயலர் இல-கணேசன் நாகர் கோயிலில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

பிரதமர் வாஜ்பாயின் அனுமதிகிடைத்தவுடன் பிரச்சாரத் திட்டம் வகுக்கப்படும் என்று கூறிய அவர்,

தி.மு.க. தலைவர் கருணாநிதி துணைப்பிரதமர் அத்வானியை விமர்சித்துப்பிரச்சாரம் செய்கின்ற போதும் பிரதமர் வாஜ்பாய் பற்றி எதுவுமே விமர்சிக்கவில்லை இது வாஜ்பாயிக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கைத்தான் காட்டுகின்றது.

அதுமட்டுமன்றி திமுக,மதிமுக, பா.ம.க கட்சிகள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் போது மட்டும் ஏன் பா.ஜ. கட்சியின் குறைகள் கண்ணுக்குத் தெரியாமல் போனது? என்றும் வினா எழுப்பியுள்ளார்.

மத்தியில் பாரதிய ஜனதாவுக்கு தனிப் பெரும்பான்மை கிடைத்தாலும் கூட்டணி ஆட்சியே அமைக்கப்படும் ஆட்சியமைத்த பின்னர் இராமர் கோயில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறியுள்ளார்

இதேவேளை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தனிமனித சுதந்திரத்தைப் பாதிக்கும் வண்ணம் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் இதனை தேர்தல் ஆணையம் தலையிட்டு தடை செய்ய வேண்டும் என்றும் மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் வரதராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் கடந்த 3வருடங்களாக மக்களை சந்திக்காத ஜெயலலிதா இப்போது மக்களை திசை திருப்பும் வகையில் பிரச்சாரம் செய்வது கவனிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தேர்தல் ஆணையத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்.



பலஸ்தீன தற்கொலைத் தாக்குதலில் மேற்குக் கரை நகரான நேப்ளஸின் வாடியில் ஏற்பட்டுள்ள புகைமண்டலம்.



வாஷிங்டனிலுள்ள தேசிய நூதனசாலைக் கட்டடத்தில் நடைபெற்ற இராப்போசன விருந்தின் போது மக்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் (இடமிருந்து வலமாக ) முன்னாள் உபஅதிபர் அல்கோர், சனநாயகக் கட்சி சனாதிபதி வேட்பாளர் ஜோன்கெறி, ஜோன் எடவர்ட் முன்னாள் சனாதிபதி பில்கிளின்டன் ஆகியோர்.

# மத்திய கிழக்கில் மீண்டும் பதற்ற நிலை... தீர்வுதான் என்ன...?

மத்திய கிழக்கில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. எந்நேரமும் தாக்குதல்கள் தொடரப்படலாம் எனும் அச்சம் உலக நாடுகளையும் கௌவிக் கொண்டுள்ளது. எந்நேரமும் எதுவும் நடக்கலாம்....மத்திய கிழக்கு அல்லோலப்படலாம்.... எனும் நிலைதான் உருவாகிக்கொண்டுள்ளது.

இதற்கு காரணம் இல்லாமலில்லை. இஸ்ரேலியர்களின் தலைகள் நிலத்தில் உருளும் என்று ஹமாஸ் இயக்கம் சூளுரைத்துள்ளது. இதேபோல் எமது அடுத்த இலக்கு பலஸ்தீன சனாதிபதி யஸீர்அரபாத்தும், ஹிஸ்புல்லா தலைவரும் என்று இஸ்ரேல் எச்சரிக்கை செய்துள்ளது.



ஏரியல் ஷரோன்

இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம்,பலஸ்தீனம், இஸ்ரேலிடையே நீறுபூத்த நெருப்பாக இருந்து வந்த முறுகல் தற்போது தீவிரமடைந்திருப்பதுதான் இதனை ஆரம்பித்து வைத்திருப்பதில் பெரும் பங்கு இஸ்ரேலினுடையது என்பதும் மறுக்க முடியாதுள்ளது.

கடந்த திட்கட்கிழமை இஸ்ரேல் நடத்திய ஹெலித் தாக்குதலில் ஹமாஸ் இயக்க ஆத்மீகத் தலைவர் ஷேக் அகமட் யாஸின் கொல்லப்பட்டுள்ளார்.

இதுதிட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் என்பது பலஸ்தீனர்களின் குற்றச்சாட்டு. அதேபோல் இஸ்ரேலும் மறுப்புக் கூறவில்லை சந்தோஷம் வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் தொலைக்காட்சி யில் தோன்றி ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டுள்ளமைக்கும் இந்தத் தாக்குதலை மேற்கொண்ட இஸ்ரேல் இராணுவத்திரையும் வாயாரப் புகழ்ந்துதள்ளியுள்ளார்.

இந்த நடவடிக்கை பலஸ்தீனர்களிடையே எரிகின்ற தீயில் எண்ணெய்வார்ப்பது போன்ற உணர்வலைகளை உருவாக்கி இருக்கலாம். அதனால்தான் விரைவில் இஸ்ரேலியர்களின் தலைகள் உருளும் என்று சபதமிட்டுள்ளார்கள்.

ஐ.நா.சபை 1947 நவம்பர் 29இல் பலஸ்தீனத்தை யூதர்களுக்கும் அரேபியர்களுக்குமாகப் பிரித்தது. பலஸ்தீனத்தின் யூதர்கள் பகுதி 1948 மே 15இல் இஸ்ரேல் எனும் புதிய நாடாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் இதற்கு அப்போதிருந்தே ஷேக் அகமட்யாஸின் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளார். பலஸ்தீனத்திலிருந்து ஒரு பகுதியை பிரிப்பதும் அதை இஸ்ரேல் நாடு என்று கூறுவதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இஸ்ரேல் என்றும் பலஸ்தீனம் என்றும் இருவேறு கூறுகள் கிடையாது. அது பலஸ்தீனம் மட்டுமே என்றும் எதிர்ப்புக்குரல் காட்டி வந்தார்.

ஆனால் ஐ.நா.சபையின் அறிவிப்பும் அமெரிக்காவின் உறுதுணையுடனும் இஸ்ரேல் தனித்த நாடாக மாறியது இன்றுவரை பலஸ்தீனம் ஒரு நாடு என்று அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் பலஸ்தீனத்திலிருந்து பிரிந்து கொண்ட ஒரு பகுதியான இஸ்ரேல் மட்டும் நாடு எனும் அங்கீகாரத்துக்குள் வந்துவிட்டது என்பது கவனிக்கத்தக்கதோர் விடயம்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாத பலஸ்தீன மக்களி டையே இஸ்ரேலுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தும் இயக்கங்கள் உருவானது. அந்த வகையில் 1987 இல் பலஸ்தீன எழுச்சிப் போராட்டத்துடன் ஹமாஸ் இயக்கம் உருவானது. இதன் தலைவராக உடல் ஊனமான போதும் மனஉறுதி தளராதவர் என்று பலஸ்தீனர்கள் ஷேக் அகமட் யாஸினை தேர்வுசெய்தார்கள்.



இன்று வரை இஸ்ரேல் பலஸ்தீனம் என்று கூறுபோடப்படுவதை ஹமாஸ் இயக்கம் எதிர்த்துத்தான் தாக்குதல்களை இஸ்ரேல் மீதுநடத்தி வந்திருக்கின்றது. அதுமட்டுமன்றி இஸ்ரேல் அமெரிக்கா இருநாடுகளுக்கும் ஹமாஸ் இயக்கம் அச்சுறுத்தலாகவேதான் இருந்தும் வருகின்றது.

பலஸ்தீன எல்லையைச் சுற்றிலும் இஸ்ரேல் அமைத்து வருகின்ற தடுப்புச்சுவர் சிக்கலும் தீர்ந்தபாடில்லை. தடுப்புச்சுவரை அகற்றுமாறு போராட்டம் நடத்திய பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியும் உள்ளது.

யார் எதைக் கூறினாலும் இஸ்ரேல் தனது தடுப்புச்சுவர் வேலையை விடுவதாக இல்லை முழுமைபடுத்தி விடுவதில்தான் தீவிரம்காட்டி வருகின்றது. இது முழுமையடையுமானால் 700 கிலோ மீற்றர் நீளமுடைய தடுப்புச்சுவர் வேலி இஸ்ரேல் பலஸ்தீனத்தை பிரிக்கும் தடுப்பு உருவாகிவிடலாம்.

அதுமட்டுமன்றி காஸா பகுதியிலுள்ள பலஸ்தீனர்களை அகற்றிவிடப் போவதாகவும் இது இன்னும் இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளவுள்ளதாகவும் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் கூறிவருகின்றார்.

காஸாபகுதியில் 13 லட்சம் பலஸ்தீனர்கள் வாழ்ந்து வருகின்றார்கள் இந்தப் பகுதியினுள் கடும் பாதுகாப்புடன் யூதக்குடியேற்றங்களும் காணப்படுகின்றன.

ஏரியல்ஷெரோன் காஸா பகுதி பலஸ்தீனர்களை அகற்றி விடப்போவதாகக் கூறினாலும் அது மிகவும் சிரமமான காரியம் என்பதையும் அவர் ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.

ஏனெனில் 1987 தொடக்கம் 1992 ஆம் ஆண்டு வரை காஸா பிரதேசத்தில் மிகவேகமாகப் பலஸ்தீனர் குடியேறினர். அதனால்தான் பலஸ்தீன எழுச்சி என்று அக்காலப் பகுதியை பலஸ்தீனர்கள் வர்ணிக்கின்றார்கள்.

இக்காலப்பகுதி இஸ்ரேலுக்கும் பலத்த அடிதான். அதனால் தான் அப்போது இஸ்ரேல் பிரதமராக இருந்தவர் 1993 இல் ஒஸ்லோ உடன்படிக்கை செய்து கொண்டார்.

இதனால்தான் தற்போதைய பிரதமர் ஏரியல் ஷெரோன் பலஸ்தீனர்களை வெளியேற்ற வேண்டுமானால் அதற்குத் தடையாக ஹமாஸ் இயக்கம் ஹிஸ்புல்லா முதல் யஸிர் அரபாத் வரையானவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்று நினைத்து விட்டார் போலுள்ளது.

இதனால் தான் ஹமாஸ் இயக்கத்தை குறி வைத்து இஸ்ரேல் தாக்குல்களை ஆரம்பித்திருக்கின்றது. அதன்படி ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டும் உள்ளார். ஹமாஸ் இயக்கத்தை வேரோடு அழிக்கும்வரை ஓயப்போவதில்லை என்பது தற்

அ.கலைவாணி

போதைய இஸ்ரேல் இராணுவத்தின் சபதமாக உள்ளது.

இதேவேளை ஹமாஸ் தலைவர் படுகொலைக்கு ஐ.நா. சபை கண்டனம் தெரிவித் துள்ளது. இதேபோல் பல நாடுகளும் இஸ்ரேல் மீது குற்றம் சாட்டியுள்ளன.

மறுபுறம் ஹமாஸ் இயக்கத்தின் இடைக்கால தலைவர் ரன்திசி,இஸ்ரேலின் பாதுகாப்பு என்பது வீணானது என்பதை இஸ்ரேல் உணரச் செய்வோம்; எங்கள் தலைவரை கொன்றவர்களை பழிக்குப் பழி வாங்குவோம்; இஸ்ரேல் இராணுவம் எங்குள்ளதோ அங்கெல்லாம் நுழைந்து தாக்குதல் நடத்துவோம்; என்று பலஸ்தீனர்கள் மத்தியில் சூளுரைத்துள்ளார்.

ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டதால் ஹமாஸ் இயக்கம் தலைமை இன்றி சிதறிப் போகும்; அழிப்பது சுலபம் என்று நினைத்த இஸ்ரேலுக்கு ஹமாஸ் அச்சுறுத்தல் விடுத்திருப்பது கவனிக்கத் தக்கதோர் விடயம். இதனால்தான் வெளிநாடுகளிலுள்ள இஸ்ரேல் தூதரகங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலில் இராணுவம் தயார்நிலையில் உஷாராக இருக்கின்றது. எந்தநேரமும் இஸ்ரேலியத் துருப்புக்கள் பலஸ்தீனர்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.



கொல்லப்பட்ட ஹமாஸ் தலைவர்

இதேவேளை புதன்கிழமை திடீரென காஸாவின் பலஸ்தீனக் குடியிருப்புக்குள் புகுந்த இஸ்ரேலியத் துருப்புக்கள் 60 பலஸ்தீன குடியிருப்புக்களை இடித்தழித்துள்ளது.

இந்த நடவடிக்கையும் பலஸ்தீன மக்களிடை யேயும்,ஹமாஸ் இயக்கத்தினிடையேயும் பலத்த கோபத்தை உருவாக்கியுள்ளது. எது எப்படியோ இஸ்ரேல் தனது நடவடிக்கைகளை முடக்கிக் கொள்ளாது. தற்போதைய ஹமாஸ் இயக்க அச்சுறுத்தல்களை காரணம்காட்டி இன்னும் பலமாக தடுப்புச் சுவரை எழுப்ப முயற்சிக்கும்.

இதேவேளை ஏற்கனவே ஹமாஸ் இயக்கம் பல பேருந்து தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றது. இதனால் இஸ்ரேலியர்கள் பேருந்தில் பயணிக்கவே அச்சம் வெளியிட்டுள்ளார்கள்.

இதனால்தான் மத்திய கிழக்கில் குழப்பமும் பதற்றமுமே ஆட்கொண்டுள்ளது. இதனை எப்படி...? யார்...? நிறுத்துவது?

இதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை ஐ.நா. கூடி ஹமாஸ் தலைவர் கொலை பற்றியும், இஸ்ரேல்,பலஸ் தீனரிடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்கும் வழி பற்றியும் ஆராய்ந்தது.

இதன்போது ஹமாஸ் தலைவரைக் கொன்றதற்காக இஸ்ரேல் மீது பலஸ்தீனம் கண்டனப் பிரேரணையைக் கொண்டுவந்தது. 15 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. சபையில் ஒரே ஒரு அரபு நாடான அல் ஜீரியா பிரேரணையைச் சுற்றுக்கு விட்டது.

ஆனால் அமெரிக் காவோ கண்டனப் பிரேரணையை ஒரு தலைப்பட்சமாக இஸ்ரேல் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பலஸ்தீனர்களின் தாக்குதல்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்று எதிர்ப்புக்குரல் காட்டியுள்ளது. இதனால் அமெரிக்காஇந்தக் கண்டனத்தை தனது வீட்டோ (veto) அதிகாரம் மூலம் ரத்துச் செய்யும் என்று நம்பலாம்.

எனவே அமெரிக்கா இஸ்ரேலின் வலதுகரமாக செயற்படும் வரை, இஸ்ரேல் ஐநா சபைக்குக் கூட கட்டுப்பட மாட்டாது என்பது உண்மையாக இருக்கும் போது, இஸ்ரேல்,பலஸ்தீனம் உடனடியாக தீர்க்கப்படும் பிரச்சினையாக இருக்கமாட்டாது.

என்றாலும் ஹமாஸ் தலைவரின் கொலை அமெரிக்கா விற்குச் சிக்கலைக் கொடுக்காமல் இல்லை. அதற்கும் மேலாக அமெரிக்கா கொண்டு வந்த மத்திய கிழக்கிற்கான வீதிபடவரைபு (ROAD MAP) எனும் சமாதானத் திட்டம் இஸ் ரேலின் நடவடிக்கைகளி னால் நொந்து நூலாகிப் போயுள்ளது என்றால் மிகையில்லை.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தி அரசியல் வணிகரைப் புறமொதுக்குவோம்

## - கிளி.மாவட்ட தமிழ்ச் சங்கம் வேண்டுகோள்

(அலுவலக செய்தியாளர்)

**ஒற்றுமைக்குரலை ஓங்கியொலிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தி அரசியல் வணிகரைப் புறமொதுக்க ஒவ்வொரு தமிழனும் முன்வரவேண்டும் என கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

"ஒற்றுமைக்குரலை ஓங்கியொலிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்துவோம்'' எனும் தலைப்பில் தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் நில ஒற்றுமை ஒன்றே இன்று தமிழரின் தற்காப்புக் கேடயமாகும். ஒன்றுபட்டு நிற்பதால் வெற்றிவருவது உறுதி. துண்டுபட்டுக்குலைந்தால் அதுவே தமிழருக்கு இறுதி.

தமிழர் தன்னாட்சி-தமிழ் நில மீட்சி- நொந்துகுலைந்து, ஊர் விட்டு ஊரோடி, இரவல் இல்லத்திலே இருந்து நலிந்து, கண்ணீர் செந்நீர் இரண்டையும் உருக்கும் தமிழினத்தின் ஒற்றுமைக்குரல் இப்படித்தான் ஓங்கியொலிக்க வேண்டும்.

துயிலும் மாவீரின் தூய பேரிலே, விடுதலைக்குப் போராடும் தமிழ் வீரர்களின் தோள் வலுத்துணையாய் தேர்தல் முடிவுகள், உலகக் கண்களைத் திறக்கவேண்டும் இந்தத் தூயபணிதெளிவாக நிறைவேற வேண்டின் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பின்னால், தளர்வின்றி அணிசேரும் தமிழர் கூட்டம், வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து நாட்டுப் பற்றை நானிலத்துக்கு அறிவிக்கவேண்டும்.

நிலமின்றேல் தமிழில்லை தமிழில்லையேல் தமிழன் இல்லை. வீட்டை மீட்டுநாட்டைப் புதுப்பிக்கும் முயற்சி, வரலாற்றுக் காலத்துக்கு முன்னிருந்தே வளமான பண்பாட்டோடு முளைத்தெழுந்த தமிழ்க் குலத்தை வாழ்விக்கும் முயற்சி.

ஒற்றுமைக்குரலை ஓங்கியொலிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தி அரசியல் வணிகரைப் புறமொதுக்க, ஒவ்வொரு தமிழனும் முன்வர வேண்டும்.

வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து விடுதலை விருப்பை வெளிக்காட்டுவோம். தமிழனும், புலிகளும் வேறல்ல ஒன்றென்று உலகத்தின் முன்னே நிலை நாட்டுவோம். தமிழர்களே! ஒன்று சேருங்கள், ஒருமுகமாய் வாக்களியுங்கள். (சோ)

# கிளி.வீதி அபிவிருத்தி திணைக்கள வளாகத்தில் பெருமளவு பார்த்தீனியம் களைகள்!

(அலுவலகசெய்தியாளர்)

பார்த்தீனியம் நச்சுத்தாவரம் கிளிநொச்சி நகரமத்திய பகுதியில் பெருமளவில் உள்ளதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

கிளிநொச்சி பிரதேச செயலகத்திற்கு அருகாமையிலுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள வளாகத்தில் பெருமளவில் மேற்படி நச்சுத்தாவரங்கள் உள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

இதனை அழிக்கநடவடிக்கை இதுவரை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இதன்காரணமாக இப்பகுதியினை அண்டியப் பகுதிகளில் மேலும் மேற்படி பார்த்தீனிய நச்சுத்தாவரம் பாவும் ஏது நிலை ஏற்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் முகாமிட்டிருந்த இந்திய இராணுவத்தினர் தமது உணவுத்தேவைக்கென இந்தியாவிலிருந்து கொண்டுவந்த ஆடுகளை இவ்வளாகத்திலே பட்டி அமைத்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)



# திறந்துவைப்பு

முல்லைத்தீவில் கடந்த புதன் கிழமை சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி புதிய இடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் முல்லை மக்கள் நலன்புரிச்சங்கத்தின் கட்டடத்தில் இயங்கிவந்த இவ்வங்கி முல்லைத்தீவு பேருந்து நிலையத்திற்கு முன்பாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (20)

# தபால் ஊழியர் தாக்கப்பட்டு வாக்காளர் அட்டைகள் பறிமுதல்

## -வத்தளையில் சம்பவம்

(கொழும்பு)

வத்தளை பிரதேசத்தில் தபால் சேவகர் வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்தபொழுது அவரைக்கடுமையாகத் தாக்கி வாக்காளர் அட்டைகளை பறிமுதல் செய்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட வாக்காளர் அட்டைகளை இவர் பறிமுதல் செய்துள்ளார். காயம் பட்ட தபால் சேவகர் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த செவ்வாய்க் கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# 15 இந்திய மீனவர்களை நாடுகடத்த உத்தரவு

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்து மீறிப்பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளையில் பிடிக்கப்பட்டிருந்த இந்திய மீன்பிடிப் படகுகளின் ஓட்டிகள் 15 பேரையும் விடுவித்து நாடு கடத்துவதற்கான உத்தரவை யாழ். மேல் நீதிமன்ற நீதவான் கே.பி.எஸ். வரதராஜா நேற்று முன் தினம் பிறப்பிதுள்ளார்.

காரைநகர் மற்றும் காங்கேசன் துறைக் கடற்பரப்புகளில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில் சிறிலங் காக்கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக் கப்பட்டிருந்தனர். இவர்கள் மீது சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல்நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், அவ்வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. (27)

# வள்ளிபுனம் வலயத்தில் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

(உடையார்கட்டு)

தியாகி அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவெழுச்சி தினம் வள்ளிபுனம் வலயத்தில் 23ம், 24ம் தினங்களில் சிறப்பாக இடம்பெற்றது.

23ம் திகதி நடைபெற்ற நிகழ்விற்கு புதுக்குடியிருப்பு பிரதேச மாவீரர் பணிமனைப் பொறுப் பாளர் தலைமை வகித்தார்.

தேசியக் கொடியை புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். நினைவுரையை புதுக்குடியிருப்பு பிரதேச பெண்கள் மேம்பாட்டு 'நிறுவனப் பொறுப்பாளர் வான்மதி வழங்கினார்.

இதேபோல் 24ம் திகதி நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. தேசியக்கொடியை வள்ளிபுனம் வலயப்பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.நினைவுக்கருத்துரைகளும் இடம்பெற்றன. (19)

# வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர் வாக்களிக்க வகைசெய்க

## -சம்பந்தப்பட்ட அதிகாரி வலியுறுத்து

(கொழும்பு)

உள்ளூர் தேர்தல்களில் புலம் பெயர்ந்த இலங்கையர்களும் வாக்களிக்கக் கூடிய நடைமுறையை அறிமுகப்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.கடல் கடந்து வேலைசெய்யும் சுமார் பதினைந்து இலட்சம் இலங்கைத் தொழிலாளர்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டிருப்பதாக புலம் பெயர்ந்தோருக்கு சேவையாற்றும் நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.இத்தகைய தொழிலாளர்களின் உரிமையை உறுதி செய்வதற்காக பாராளுமன்றத்தில் எவரும் குரல் எழுப்பவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# குடாநாட்டில் பார்த்தீனியம் செடிகளை கட்டுப்படுத்த த.பொ.மே.நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சூழல் சமநிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பார்த்தீனியம் செடிவகையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தனது இயல்பினால் நிலத்தினை தரிசு நிலமாக மாற்றுவதுடன் சூழலில் பெரும் தாக்கங்களையும் உருவாக்கக்கூடிய பார்த்தீனியம் எனும் செடி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மிகவேகமாகப் பரம்பலடைந்து வருகின்றது.

இதனைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்குரிய அரச திணைக்களங்கள் தவறிவிட்டதனால் யாழ்ப்பாணத்தின் சூழல் சமநிலை குழம்பும் அபாயம் உள்ளதாக மக்கள் ஆட்சேபங்களை தெரிவித்து வருகின்றனர்.

உரிய அரச திணைக்களங்களால் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் பெருகி வரும் இப்பார்த்தீனியம் செடிகளின் பரம்பலைக் கண் காணித்துக் கட்டுப்படுத்தும் முயற்சியை யாழ்ப்பாணத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஆரம்பித் துள்ளனர். (33)



*கிளிநொச்சி பரந்தன் பிறவுன் கொம்பனி வீதியில் நேற்று முன்தினம் வாகனக் கண்ணிவெடியில் சிக்கி சிதறிய உழவு இயந்திர இழுவைப் பெட்டியினையும், வெடித்த இடத்தில் ஏற்பட்டுள்ள பாரிய குழியினையும் படத்தில் காணலாம்(படம் -சோதி)*

# விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'திருவிழா' வீதிநாடகம்

(அலுவலக செய்தியாளர்)

சமகால அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான 'திருவிழா' எனும் வீதிநாடகம் தற்போது கிளிநொச்சி பிரதேசத்தில் கிராமம் கிராமமாக நடாத்தப்பெற்று வருகின்றது.

கு.சேரனின் நெறிப்படுத்தலில் நடாத்தப்பெற்று வரும் மேற்படி வீதிநாடகத்தினை பெருமளவில் மக்கள் கூட்டம்கூட்டமாகச் சென்று பார்வையிட்டு கருத்துக்களை உள்வாங்கி வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது. (சோ)

# மன்னார் மாவட்டத்தில் முதலிடம்

கடந்த 2003 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் மன்னார் சித்தி விநாயகர் தேசியக்கல்லூரியைச் சேர்ந்த செல்வன் மாணிக்கவாசகர் தனுராஜ் என்பவர் 08 பாடங்களிலும் ஏ சித்தி களைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதன்மை பெற்றுள்ளார். (மி)

## புதுக்குடியிருப்பு ம.வி முதலிடம்

புதுக்குடியிருப்பு கோட்டப்பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் 405 புள்ளிகளைப் பெற்று புதுக்குடியிருப்பு ம.வி.முதலாம் இடத்தையும், 135 புள்ளிகளைப் பெற்று விசுவமடு ம.வி இரண்டாம் இடத்தையும், 120 புள்ளிகளைப் பெற்று இரணைப்பாலை றோ.க. ம.வி. மூன்றாம் இடத்தையும் பெற்றன. (20)



திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்திற்கான புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.துணுக்காய் கல்வி வளநிலைய முகாமையாளர் சோ.தியாகராசா கட்டடத்தைத் திறந்து வைத்தார். (படம்- தங்கசாமி)

# போரால் பாதிப்புற்ற சிறுவர் மறுவாழ்வு திட்டங்கள்

# போதிய நிதியின்மையால் செயற்படுத்த முடியா நிலை!

## -த.பு.கழக நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்

**(செட்டிகுளம்)**

**வடக்கு-கிழக்குப் பகுதிகளில் போரால் பாதிக்கப்பட்டு பெருமளவு சிறுவர்கள் உள்ளனர். தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் இனம் காணப்பட்டுள்ளவர்களுக்கு உதவி செய்வதற்குப் போதிய அளவு நிதி இன்மையால் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் இருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் எஸ்.மலரவன் தெரிவித்தார்.**

வவுனியாவில் கடந்த வியாழன் அன்று தமிழர்புனர் வாழ்வுக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கும் பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். வடக்குகிழக்கு பகுதிகளைச் சேர்ந்த எட்டுமாவட்டங்களில் 6151சிறார்கள் உடல் உளரீதியான பாதிப்புக்குள்ளாகியுள்ளமை தொடர்பாக இனம் காணப்பட்டிருக்கின்றது இவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 1425 சிறார்களும், யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த 700சிறார்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 291 சிறார்களும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 321சிறார்களும; அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 587 சிறார்களும், மட்டக்களப்பு மாவட்டத்தைச்சேர்ந்த 1116 சிறார்களும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த் 1047 சிறார்களும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 664 சிறார்களும், பாதிப்புக் குள்ளாகியுள்ளதாக இனம் காணப்பட்டுள்ளது. இவர்களில் 1520 சிறார்கள் பயன் பெற்றிருப்பதாகவும் ஏனைய 4631 சிறார்களும் இனம் காணப்பட்டுள்ள போதிலும் அவர்களுக்கான தேவைகளினை நிறைவுசெய்ய நிதி பற்றாக்குறையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த சிறார்களின் மறுவாழ்வுக்கென இருவருடகால செயற்திட்டமொன்று வகுக்கப் பட்டபோதும் அதனை செயற்படுத்த தேவையான நிதி உதவிகள் இதுவரை கிடைக்கப் பெறவில்லையெனவும் அவர் கூறினார். (21)

# அனுமதியின்றி ஓட்டுநர் பயிற்சி வழங்கும் பயிற்றுவிப்பாளர் மீது நடவடிக்கை

## வாகனப் போக்குவரத்துப் பிரிவு அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ காவல்துறையின் அனுமதி இன்றி ஓட்டுநர் பயிற்சி வழங்குகின்ற பயிற்றுவிப்பாளர்கள் மீது எதிர்வரும் முதலாம்திகதி முதல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத் துப்பிரிவுப் பொறுப்பாளர் றொய்க்காந் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வாகன சாரதிகளை உருவாக்குவது என்பது பொறுப்புணர்வுள்ள கடினமான பணியாகும். இதனை மிகுந்த அக்கறையுடன் மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய பொறுப்புமிக்க வேலையை இன்று ஒருசில பயிற்றுவிப்பாளர்கள் போதிய அறிவின்றி வெறுமனே இலாபநோக்கிற்காக பயன்படுத்துகின்றார்கள். இவர்களிடம் பயில்கின்ற பயின்ற சாரதிகள் பொறுப்பற்றதனமாக வீதியில் வாகனங்களை செலுத்துவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றது. இவ்வாறு பயில்கின்ற பயின்று தவறான முறையில் வாகனங்களை செலுத்துவதனால்தான் இன்று பெருமளவு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.எனவே இத்தகைய விபத் துக்களுக்கு முடிவுகாணும் வகை யில் வாகனச்சாரதி பயிற்றுவிப்பாளர்கள் அனைவரும் எதிர்வரும் முதலாம்திகதிக்கு முன்னர் காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினரின் அனுமதியைப் பெற்று சாரதிகளுக்கு பயிற்சியை வழங்குமாறும் குறித்த திகதிக்கு முன்னதாக அனுமதியைப் பெறாது செயற்படும் சாரதி பயிற்றுவிப்பாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (லோ)

# சுதந்திரமாக செயற்படக்கோரி ஏரிக்கரை ஊழியர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஏரிப்பத்திரிகை நிறுவன ஊழியர்கள் தம்மை சுதந்திரமாக பணி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கோரி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு வருடமும் அரசாங்கத் துக்கு சார்பான செய்திகளை வெளியிடுவதினால் அதிகளவிலான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அந்த வழக்குகளில் கூடுதலான நஷ்டஈடுகள் லேக்கவுஸ் நிறுவனத்தினால் கட்டப்பட்டு வருகிறது. இதனால் ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவில் பாதிப்பு ஏற்படுகின்றது என ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்போது உண்மைச் செய்திகளை வெளியிடுவதற்கான சுதந்திரத்தை தருமாறும் நிறுவன முகாமை தமக்கு இசைவான செய்திகளை பிரசுரிப்பதால் தங்களின் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படுவதாகவும் ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (32)

## போக்குவரத்து தடை!

கேப்பாபிலவு- புதுக்குடியிருப்பு வீதியில் பாலம் கட்டுமானப்பணி நடைபெற்றுவருவதால் 27.03.2004 தொடக்கம் வருவதால் 04.04.2004 வரை இவ்வீதி போக்குவரத்திற்கு முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் இதற்கு ஒத்துழைக்குமாறும் தமிழீழ நிர்வாக சேவையின் முல்லை மாவட்ட பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (20)

# 30ஆம் திகதியுடன் பிரச்சாரங்களை நிறுத்த தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 30 திகதி செவ்வாய்க் கிழமை நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் அரசியல் விடயங்கள் சம்பந்தமான எந்தவிதமான செய்திகளையும், பேட்டிகளையும், பிரச்சாரங்களையும் ஒலி,ஒளி பரப்பக் கூடாது.

இவ்வாறு இலத்திரனியல் ஊடகங்களுக்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார். அச்சு ஊடகங்கள் தேர்தல் தினத்திற்கு 24 மணி நேரத்திற்கு முன்னதாக அரசியல்கட்சிகள் தொடர்பாக செய்தி வெளியிடுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அரசமற்றும் தனியார் துறை ஊடக நிறுவனங்களின் தலைவர்களை தேர்தல் ஆணையாளர் செவ்வாய்க்கிழமை சந்தித்து தேர்தல் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றி அறிவுறுத்தியுள்ளார். அத்துடன் தன்னால் வெளியிட்டுள்ள ஒழுங்கு விதிகளை ஊடகங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2003 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சையில் கூடிய பெறுபேறுகளைப் பெற்ற மு/வற்றாப்பளை மகாவித்தியாலய மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சு.சேதுமதி 4A,5B, அ.நிவேதினி 3A,4B,C,S, பா.மேகலா 2A,B,3C,2S, த.திலீபன் 4A,3B, பொ.சுஜிதா 2A,4C,2S சி.யசோக்குமார் B,3C.4S, சி.அருளினி A,B,5C,S அ.சதீசனா A,3B,3C,2S கு.குலதீபன் A,3C,4S மு.ஜெயந்தன் B,3C, 3S ந.அகிலநேசன் 3B,3C,2S தி.அபிதன் 5C,S

குறிப்பு:- குறித்த மாணவர்கள் எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்-எஸ்.எஸ்.ஸ்ரீஸ்.க.
சபாஜிதன்
(ஆசிரியர்கள்)வற்றாப்பளை.

(சி - 7176)



## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்[வ.து]

## வெதுப்பக உற்பத்தி நிலையம் குத்தகைக்கு விடுதல்

மேற்படி புதுக்குடியிருப்பு .ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான வெதுப்பக உற்பத்தி நிலையம் குத்தகைக்கு விடப்படவுள்ளது. எனவே இவ் உற்பத்தி நிலையத்தை குத்தகைக்கு பெறவிரும்புவோர் 2004.04.15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தலைவர் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
மு/புதுக்குடியிருப்பு,
ப.நோ.கூ.சங்கம்.

(சி-7177)



## நெஞ்சில் நிறைந்த நினைவுகள்



பிறப்பு

15-08-1979 —— 29-04-1977

வீரச்சாவு

01-08-1997 —— 28-03-2000



**லெப்.கீர்த்தி**
திருஞானசம்பந்தபிள்ளை
நவநீதன்

**கப்டன் கவிவேந்தன்**
திருஞானசம்பந்தபிள்ளை
சிறிகரன்

தலைவன் வழியில்
உணர்வுடனே பாதம் தனைப்பதித்து
எதிரியவன் பாசறை தேடி
விரைந்தவர் இவர்கள்
களத்தில் பல சாதனைகள் படைத்து
ஓயாது அலை மூன்றிலும், ஓமந்தையிலும்
வெற்றிகள் பல தேடித்தந்து

இன்று நெஞ்சு நிறைந்த
நினைவுகளுடன் கல்லறையில்
துயில் கொள்கின்றனர்.
இவர்களை நினைவில் சுமந்து
கல்லறையில் இவர்களுடன்
வீரச்சாவடைந்த மாவீரர்களையும்
பூஜித்து நிற்கின்றோம்.

இந்நாளில் போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து எமது மதிய போசன விருந்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தற்காலிகமுகவரி,
தட்சணாமூர்த்தி,
சிம்வட்டாரம்,
முள்ளியவளை.

(சி9278)

தகவல்:
தேவரூபி,
(போராளி)
மயூரிமுகாம்,
முள்ளியவளை.



**சிந்தனைக்கு**

எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும், உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 28 -03-2004


## துரோகக்கும்பலின் இலக்கு!

யாழ்.கொக்குவில் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாகப் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்மீது ஈ.பி.டி.பி. தேசவிரோதக் கும்பல் நடத்திய தாக்குதலில் இரு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்; மண்டைதீவிற்குத் தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்கெனச் சென்ற தமிழ்த் கூட்டமைப்பு வேட்பாளர்களைக் கடற்படையினர் தடுத்துநிறுத்தி அவர்களைத் திருப்பியனுப்பியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வாக்காளர்களைத் தேர்தலில் வாக்களிக்க வைப்பது தொடர்பாக தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், யாழ்.குடா நாட்டில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கமுடியுமா? என்ற கேள்வியை மேற்கூறப்பட்ட சம்பவங்கள் எழவைப்பவையாகவுள்ளன.

கடந்தகாலத் தேர்தலில் சிங்கள ஆயுதப்படையினரும், தமிழ்த் தேசவிரோதக்கும்பல்களும் ஒருங்கிணைந்து செயற்பட்டன என்பதும், இதனால், ஈ.பி.டி.பி.போன்ற இன விரோதக்கும்பல்கள் - சனநாயக தேர்தல் மற்றும் தேர்தல் நடைமுறைகளை[illegible]க் கேலிக்குள்ளாக்கி ஆதாயம் அடைந்திருந்த[illegible] என்பதும் வெளிப்படையானது.

எடுத்துக்கா[illegible]ாக கடந்த தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்களைத் தீவகத்தில் ஈ.பி.டி.பி. தேச விரோதக்கும்பல் படுகொலை செய்ய முற்பட்டமையும், பின்னர், தீவகத்தில் சிறிலங்கா ஆயுதப்படையினரின் ஆதரவுடன் பெரும் தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டமையும் சகலரும் அறிந்ததொன்றே. அத்தோடு, ஈ.பி.டி.பி.யின் தேர்தல் அராஜகத்தை வெளிக்கொண்டுவந்த ஊடகவியலாளரான நிமலராஜனை இவர்கள் படுகொலை செய்ததும் அனைவருக்கும் தெரிந்ததே.

ஆனால், கடந்தசில தேர்தல்களைப் போன்று இம்முறை ஈ.பி.டி.பி.யினரால் முழு அளவிலான தமது அராஜகத்தையும், மோசடிகளையும் சுதந்திரமாக மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைந்தளவிலேயே உள்ளன. ஏனெனில், இம்முறை தேர்தலில் தமிழ்மக்களின் கவனம் முழு அளவில் திரும்பியுள்ளதோடு, யுத்தநிறுத்த உடன்பாடு அமுலில் இருப்பதும் இத்தகைய இடையூறுகளுக்குக் காரணமாகும்.

ஆயினும் ஈ.பி.டி.பி. தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருப்பதாக இல்லை. சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பின் உதவியுடன் கடந்த காலத்தைப் போன்று இம்முறையும் தேர்தல் வன்முறை மோசடிகளில் ஈடுபடுவதில் முனைப்புடன் செயற்படுவதாகவே உள்ளது. ஆனால், கடந்த காலத்தில் மோசடி[illegible] மூலம் பாராளுமன்றத்திற்குப் பலரை அனுப்பியது போன்[illegible] இம்முறை அனுப்புவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ள[illegible]மையால் தேர்தல் குறித்து ஈ.பி.டி.பி.யின் நோக்கம் சற்று வேறுபட்டதாகவும் உள்ளது.

அதாவது தேர்தல் மூலம் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவது சாத்தியமற்றது என ஈ.பி.டி.பி. கருதும் இடத்தில், வன்முறை மூலம் தேர்தலைக் குழப்பியடித்தல் என்பதையே அது நோக்கமாகக் கொண்டுள்ளதாகக் கருத இடமுண்டு. இதற்கு சிங்கள ஆயுதப்படையினரின் ஒத்துழைப்பும் அவர்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு முழு அளவிலேயே உள்ளது.

இதன் வெளிப்பாடுகளாகவே சிறிலங்கா ஆயுதப்படையினர் ஈ.பி.டி.பி. குழுவினருக்கு ஆதரவாகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள அதேவேளை, ஈ.பி.டி.பி.யினரின் தேர்தல் வன்முறைக்குப் பூரணமான பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். அத்தோடு தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் முட்டுக்கட்டைகளைப் போட்டுவருகின்றனர்.

இவற்றின் வெளிப்பாடே கொக்குவில், மண்டைதீவுச் சம்பவங்கள் ஆகும். இதேவேளை இத்தகைய சம்பவங்கள் தேர்தல் நெருங்க நெருங்க மேலும் தீவிரமாகும் என்றே எதிர்பார்க்கலாம். ஈ.பி.டி.பி.யைப் பொறுத்து மோசடி, வன்முறை என்பனவற்றின் மூலம் வாக்குப்பெட்டிகளை நிரப்புதல் அன்றி வன்முறை மூலம் வாக்களிப்பைக் குழப்புதல் அன்றிக் குறைந்தளவு வாக்களிப்பு இடம்பெறும்வகையில் நடந்துகொள்ளுதல் என்பதே நோக்கமாகும்.

ஈ.பி.டி.பி. தேச விரோதக்கும்பலுக்கு இம்முறை ஒன்று நன்றாகவே தெரியும். தமிழ்மக்கள் யாவரும் ஏகோபித்த குரலில் தமது ஒற்றுமையை வெளிப்படுத்துவதோடு, விடுதலைப்புலிகளைத் தமது ஏக பிரதிநிதிகளாகக்கூட தெரிவு செய்ய முற்பட்டுள்ளனர் என்பது. மக்களின் இந் நோக்கம் ஈடேறுமானால், இத் தேசவிரோதக் கும்பல்களின் அரசியல் எதிர்காலம் என்பதே கேள்விக்குரியதொன்றாகிவிடும்.

இந்நிலையில் அரசியலில் தமது இருப்பை அவர்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமானால், மோசடி மூலம் தேர்தலில் பல ஆசனங்களைக் கைப்பற்றுவதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் தேர்தல் சீரானமுறையில் நடைபெற அனுமதித்தல் கூடாது. அதாவது தேர்தல் குழப்பப்படுதல் வேண்டும். ஆகையினால் ஈ.பி.டி.பி. யின் தற்போதைய தேர்தல் வன்முறைகள் தொடர்பான நடவடிக்கைகளும், அதற்கு ஆயுதப்படைத்தரப்பின் ஒத்துழைப்பும் இத் தேர்தலில் அவர்கள் தமது நோக்கத்தை நிறைவு செய்வதற்கான முன்னோடி நடவடிக்கையே ஆகும்.

## புலிகளும் மக்களும் பிரிக்கமுடியாத சக்திகள் சர்வதேசத்திற்கு தேர்தலில் காட்டுவோம்

### -கூட்டமைப்பு வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களில் இருந்து புலிகளை வேறுபடுத்திக் காட்டுவதற்காக இன்றுபல தீய சக்திகளும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. ஆனால் தமிழ்மக்களும்,புலிகளும் பிரிக்க முடியாத சக்திகள் என்பதை நாம் சர்வதேச உலகிற்கு காட்டுவதற்காக எதிர்வரும் தேர்தலை தமிழ் மக்கள் பயன்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளரில் ஒருவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு யாழ்.நகரில் இடம் பெற்ற பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் கலந்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களில் இருந்து விடுதலைப்புலிகளைத் தனிமைப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தை மழுங்கடித்து விடலாம் என்ற நோக்கில் சில தீயசக்திகள் செயற்பட்டு வருகின்றன.

இதற்குப் பல துரோகங்களையும் தமிழ் மக்களுக்குப் புரிந்த கருணா, ஈ.பி.டி.பி.யின் செயலர் டக்ளஸ் தேவானந்தா, கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி போன்றோரைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவர்களின் கபட நாடகங்களை நம்பவில்லை போவதற்கு புலிகளோ, தமிழ் மக்களோ ஏமாளிகள் அல்ல. விடுதலைப் புலிகளேதமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள், தமிழ் மக்களும் புலிகளும் பிரிக்க முடியாத சக்தியாக திரண்டு நிற்கின்றனர். என்பதை இந்தத் தேர்தலூடாக சர்வதேசமட்டத்தில் உரக்க ஒலிக்க விட வேண்டும். இதுவே எமது தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தியை எம் கைகளில் தரும் என்றார்.(33)

## தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட 10 அரச வாகனங்கள் மீட்பு!

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப் பட்டதாகக் கருதப்பட்ட 10 அரச வாகனங்கள் விசேட பொலி சாரால் கைப்பற்றப்பட்டுள்ளன இதனைத் தேர்தல் கண்காணிப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. கைப்பற்றப்பட்ட இந்த வாகனங்கள் கொழும்பு உட்பட பல்வேறு பிரதேசங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் அரச வாகனங்களைக் கைப்பற்றும் நடவடிக்கை கடந்த புதன்கிழமை தொடக்கம் நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. என்றும் தேர்தல் கண்காணிப்புப்பணியகம் கூறியுள்ளது.

## பௌத்த தர்ம ராஜ்ஜியத்திற்காகப் பாடுபடும் பிக்குகள் வன்முறையில் ஈடுபடுவது நியாயமா ?

### -மக்கள் கலைஞர்கள் சங்கம்

பௌத்ததர்ம ராஜ்ஜியத்தை ஏற்படுத்தப் போகின்றோம் என்று கூறிக்கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்ற பிக்குகள் வன்முறைகளில் ஈடுபடுவது எந்தவிதத்தில் நியாயம் என்று மக்கள் கலைஞர்கள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.மக்கள் கலைஞர்கள் சங்கத்தின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஜாதிகஹெல உறுமயவின் உறுப்பினர்கள் தாக்கியுள்ளார்கள்.

பௌத்த தர்ம ராஜ்ஜியத்தை உருவாக்குவோம் என்று கூறும் பிக்குமார்கள் இவ்வாறான வன்முறைகளில் ஈடுபடுவது நியாயமா? இது தொடர்பாக பிக்குமார்கள் கூறும் விளக்கம் தான் என்ன? தேர்தல் காலத்திலேயே இப்படி என்றால் தேர்தலில் வெற்றிபெற்று பிக்குமார்கள் பாராளு மன்றத்திற்குப் போனால் என்ன நடக்கும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்கள். கடந்த வியாழக்கிழமை ஊடகவியாலாளர் மாநாட்டிலேயே மக்கள் கலைஞர்கள் சங்கம் இவ்வாறு கூறியுள்ளது.

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்தியமைக்கும் சனாதிபதியின் திட்டம் போருக்கே வழிவகுக்கும்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

ஐ.தே. முன்னணி முன்னெடுத்துச் செல்லும் சமாதானத்தை உறுதிப்படுத்துவதா அல்லது 51 நாடுகளும் 22 உலக அமைப்புக்களும் அனுமதித்து கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திருத்தி அமைப்பதன் மூலம் புலிகளை மீண்டும் போருக்குத் தள்ளுவதா என்பதை வரும் 2ம் திகதி மக்கள் தீர்மானிக்க வேண்டும் என ஹாரிஸ்பத்து தேர்தல் தொகுதியில் நடைபெற்ற ஐ.தே.முன்னணியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடும்போது, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திருத்தியமைத்து தாம் சமாதானத்தைக் கொண்டுவருவதாக சனாதிபதி கூறுவது எவ்விதம் என்பதை விளக்க வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

சனாதிபதி கட்டுகஸ்தோட்டை, கண்டியாகிய பகுதிகளுக்கு பயமின்றியும், சந்தேகமின்றியும் சென்று சந்தையில் மரக்கறிகள் கொள்வனவு செய்ய முடிந்ததும் நாம் உருவாக்கிய சமாதானத்தின் விளைவே என்றும் 10 ஆயிரம் இளைஞர்களை பலியிட்டு திறக்க முடியாது போன ஏ-9 நெடுஞ்சாலையை புலிகளின் மூலமாக தான் திறந்து வைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்நாட்டில் 18 வருடமாக நடைபெறும் யுத்தத்தை நிறுத்தி சிங்கள,தமிழ், முஸ்லிம் இனங்கள் யுத்தத்திற்கு முடிவு காணவே விரும்புகிறார்கள். அதிலிருந்து நான் எந்த அரசியல் நன்மையையும் பெற விரும்பவில்லை.

தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை போக்கவும் அவர்களின் கஷ்டங்களை ஏற்றுக் கொள்ளவுமே ஐ.தே.முன்னணி விரும்புகின்றது என்றார்.


## இந்தியா-பாகிஸ்தான் முதலாவது டெஸ்ட் முல்டக் நகரில் இன்று ஆரம்பம்

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று முல்டக் நகரில் ஆரம்பமாகின்றது. இத்தொடர் மூன்று போட்டிகளைக் கொண்டதாகும். இதற்கான பாகிஸ்தான் வீரர்களின் விபரம் வருமாறு;

இன்சமாம் உல்ஹக் (அணித் தலைவர்), இம்ரான் பர்காத், தௌபிக் உமர், யசிர் ஹமிட், யூசுப்யுகானா, அப்துல் ரசாக், மொயின்கான், சொயில் மலிக், ஆசிம்கமால், மிஸ் பாஉல்ஹக், டேனிஸ்கனேரியா, சக்லைன் முஸ்டாக், சொஹைப் அக்தார், முகடமட்சமி, சபிர் அகமட், உமர்குல் ஆகியோர்.

ஒருநாள் போட்டியில் ஆடிய சாகிட் அப்ரிடி,யூனிஸ் கான் ஆகியோர் டெஸ்ட் அணியில் இடம்பெறவில்லை.

இதேவேளை ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்தியா,பாகிஸ்தானை 3-2 என்ற கணக்கில் வெற்றிகொண்டமை தெரிந்ததே.



# கைதடியில் கூட்டமைப்புடன் வீண்வம்பு செய்த சங்கரியின் ஆதரவாளர்கள் விரட்டியடிப்பு

யாழ்.கைதடிப் பகுதியில் அப்பகுதி மக்களுக்கு வீ-ஆனந்த சங்கரியின் சுயேட்சைக் குழு ஆதரவாள்களுக்குமிடையே பெரும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து அங்கு திரண்ட மக்கள் வீ.ஆனந்த சங்கரியின் சுயேட்சைக் குழு ஆதரவாளர்களை விரட்டியடித்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது. மேற்படி இடத்தில் ஆனந்தசங்கரி ஆதரவாளர்களும் கூட்டமைப்பினரும் பிரச்சாரங்களில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை சங்கரியின் சுயேட்சைக் குழு ஆதரவாளர்கள் படைத்தரப்பினரின் உதவியுடன் வீண் அடாவடித்தனங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் எம் மத்தியில் தேச விரோதக் கருத்துக்களை திணிக்க முயல வேண்டாம் என கோஷமிட்டு ஆனந்தசங்கரியின் சுயேட்சைக்குழு ஆதரவாளர்களை விரட்டியடித்துள்ளதுடன் வீண் வன்முறைகளைத் ஏற்படுத்த முயலும் இத்தகைய தேசவிரோத சக்திகளின் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என மக்கள் ஆட்சேபம் தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர். இதனை அடுத்து மக்களை விரட்டி அடிக்கும் நோக்குடன் அப்பகுதிக்கு வந்து இறங்கிய பொலிசார் வான் நோக்கி துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. (33) (27)

# உயிர்விதைப்பு கவிதை நூல் நாளை யாழ்.இல் வெளியீடு

(அலுவலகசெய்தியாளர்)

தாயக விடுதலைப் போராட்டத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு நோர்வேயில் செயற்பட்டுவரும் ஈழத்துக் கவிஞர் சோதியாவின் 'உயிர்விதைப்பு' கவிதை நூல் வெளியீடு நாளை பி.பகல் 3.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது, 'உயிர் விதைப்பு' நூல் வெளியீட்டு விழாவின் வரவேற்புரையை கலை பண்பாட்டுக்கழக யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் வளநாடனும், தலைமையுரையை பத்திரிகையாளர் பொ.ஐங்கரநேசனும், சிறப்புரையினை புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பனும் வெளியீட்டுரையை கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்தவுள்ளனர். இவர்களது உரையைத தொடர்ந்து கவிதை நூலினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியிட்டுவைக்க, நூல் மதிப்பீட்டுரைகளை கவிஞர் சோ.பத்மநாதனும், பேராசிரியர் அ.சண்முகதாஸும் பதிலுரையை நூலாசிரியர் கவிஞர் சோதியாவும் நிகழ்த்தவுள்ளனர். (33,சோ)

# ஆனந்த சங்கரி, டக்ளசின் ஆதரவுடன் பலம்பொருந்திய அரசை அமைப்போம்

## – ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறுகிறார்

ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா, அதாவுல்லா, பேரியல் அஸ்ரப் ஆகியோரின் உதவியுடன் பலம்பொருந்திய அரசொன்றை ஏற்படுத்துவோம் என ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவனந்தா, பேரியல் அஷ்ரப், அதாவுல்லா ஆகியோர் இம்முறை வடக்கு கிழக்கில் அமோக வெற்றி பெறுவார்கள். அவர்களின் ஆதரவு எப்பொழுதும் வெற்றிலைச் சின்னத்துக்கே உண்டு. எனவே இம்முறை தேர்தலில் நாம் அமோக வெற்றி பெற்றுபலம் பொருந்திய அரசொன்றை அமைப்போம் என அவர் குறிப்பிட்டார்.

# தேர்தல் வன்முறையற்ற மாவட்டமாக திருமலை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தேர்தல் வன்செயல்கள் எதுவும் இடம்பெற்றதாக இதுவரை பொலிசில் முறையிடப்படவில்லை என்று திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிபர் உபாலி ஹேவகே தெரிவித்தார்.

தேர்தல் கால வன்செயல்களே இடம்பெறாத மாவட்டமாக இலங்கையிலே திருகோணமலை மாவட்டம் 2001 டிசம்பர் தேர்தல் காலத்திலும் சாதனை ஒன்றை நிலைநாட்டியது. 2001 டிசம்பர் தேர்தல் தொடர்பான அவதானிகள் அறிக்கைகளிலும் இதுபற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. மனித உரிமை அமைப்புக்களும் திருகோணமலையின் சாதனையை சுட்டிக் காட்டியிருந்தன. கடந்த வெள்ளிக் கிழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசஅதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான காமினி றொட்ரிக்கோ தலைமையில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான மாநாட்டிலும் சிரேஷ்ட பொலிஸ அதிபர் உபாலி ஹேவகே தற்போதும திருமலை மாவட்டத்தில் குற்றச் செயல்கள் ஒன்று கூட இடம் பெறவில்லை என்று தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட பொலிஸ தலைமையகத்தில் உள்ள தேர்தல் கால குற்றச்செயல் மற்றும் தேர்தல் சட்டங்களை மீறும் செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் பிரிவில் தேர்தல் சட்டவிதிகளை மீறியதாக இரண்டு முறைப்பாடுகள் மாத்திரமே பதிவுசெய்யப்பட்டிருப்பதாக தெரிவிககப்பட்டது. தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டியது பற்றியதாக அம் முறைப்பாடுகள் இருந்தன என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (25)

# பனையியல் நூல் அறிமுகம்

முருகேசு பாக்கிய நாதனின் "பனையியல்" நூல் அறிமுகம் இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இணைப்பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். பல்கலைக கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# 'சட்டன' ஆசிரியர் படுகொலையில் சனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு தொடர்பு

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம் குற்றச்சாட்டு

1999 இல் 'சட்டன' ஊடக இதழ் ஆசிரியர் றோகணகுமாரவின் கொலையில் உயர் அதிகாரிகள் தொடர்பு கொண்டிருப்பதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இது சம்பந்தமாக அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அது கூறியுள்ளது. அவரின் கொலையின் பின்னணியில் சனாதிபதி பாதுகாப்புபிரிவு சம்பந்தப்பட்டுள்ளதாகவும் குறிபபிட்ட ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. இக் கொலைக்காக பெருமளவு பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு கூறியுள்ளது.

சனாதிபதியின் ஆலோசகர் ஒருவர் லஞ்சம் பெற்றதாக றோகணகுமார வெளியிட்ட செய்தியை அடுத்து அவர் கொலை செய்யப்பட்டதாக றோகணகுமாரவின் மனைவி அளித்துள்ள வாக்குமூலமும இந்த அமைப்பால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை சனாதிபதியின் ஊடகப பேச்சாளர் ஜனதாச பீரிஸ் மறுத்துள்ளார். (32)

# இறைவரி மன்னிப்புச் சட்டமூலம் அரசியல் யாப்புக்கு முரணானது

உள்நாட்டு இறைவரி மன்னிப்புச் சட்ட மூலம் அரசியல் யாப்பிற்கு முரணானதென உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஐந்து நீதிபதிகள் கொண்ட உயர்நீதிமன்றம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக சனாதிபதி செயலகம வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இச்சட்டமூலத்தின் சட்டபூர்வ தன்மை பற்றி ஆராய்ந்து அதுபற்றி தீர்மானம் ஒன்றை வழங்குமாறு சனாதிபதி உயர் நீதிமன்றத்திற்கு கூறியதைத் தொடர்ந்து நீதிமன்றம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### காணாமல்..

துடன் இருவர் காயமடைந்தமை தெரிந்ததே.

இச்சம்பவத்தில் காணாமல் போன பருத்தித்துறையைச் சேர்ந்த மிக்கேல்சாமி ஜெயசிங்கம் (வயது35) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையாரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலத்தை கடலில் இருந்து மீட்டெடுத்த மீனவர்கள் அச்சடலத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்ல முற்பட்டபோதும் கடற்படையினரும் பொலிசாரும் அதற்கு அனுமதி மறுத்துள்ளனர். முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் மிகமோசமான காயங்களுடன் சடலம் காணப்பட்டது. இதே வேளை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நேரில் விஜயம் செய்த பருத்தித்துறை க.அரிய நாயகம் விசாரணைகளின் பின் சடலத்தை அடக்கம் செய்வ தற்காக உறவினர்களிடம் கையளிக்க பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளா (33,27)

### கைதடிப்...

மக்களது வெறுப்பையே சம்பாதித்து வருகின்றனர். மக்களது அரசியல் அபிலாசைகளைப் புறந்தள்ளிவிட்டு துரோக சுயநல நாட்டங் கொண்டு சிறிலங்காப் படையினர் துணையுடன் திட்டமிட்டுச் செயற்பட்டு மக்கள் மீதும், விடுதலைப் புலிகள் மீதும் தொடர்ந்தும் பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருதை எமது மக்கள் அறிவர்.

அந்த வகையில் 27.03.2004 அன்று கைதடிப்பகுதியில் மக்களின இயல்பான வெறுப்புணர்ச்சியால் விளைந்த சம்பவத்துக்கு விடுதலைப புலிகளே காரணம் என ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது. உண்மைக்குப்புறம்பான விடயமாகும் இச்சம்பவத்திற்கும் விடுதலைப புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இதேபோல் சாவகச்சேரி, சங்கத்தானையிலும் வாகனங்களில் வந்த விடுதலைப்புலிகள் அச்சுறுத்தியதாக தெரிவித்திருப்பது முற்றிலும் பொய்யானது. மக்களும், விடுதலைப்புலிகளும் அவர்களது பிரச்சாரத்துக்கு எவ்வித குறுக்கீடுகளையும் மேற்கொள்ளவில்லை.

படையினரின் பெரும் பந்தோபஸ்துடன் வந்த இவர்களுக்கு மக்களோ, விடுதலைப்புலிகளோ எவ்வகையில் அச்சுறுத்தலை விடுக்க முடியும்? ஏற்கனவே பாவனையில் இருக்கும் எமது உறுப்பினர்களை வாகன இலககங்களை எடுத்து தமது பொய்மைக்கு ஆதரப்படுத்துவது வேடிக்கையானதே.

தமிழ் மக்கள் தமது இலட்சியத்தை அடைவதற்கு ஓர் அணியில் திரளுவது தெளிவாகுவதால், இயல்பாகவே அராஜக வாதிகளாகிய இவர்கள் ஆத்திரப்படுவதன் விளைவாக பொய்க்குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதுடன் இராணுவத்தினரையும் தூண்டி கைதடியில் உள்ள எமது பணிமனையை கடந்த மாலை முற்றுகையிட்டனர்.

இச்செயற்பாடுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என நாம் கருதுவதுடன் எமது கண்டனங்களையும் வெளியிடுகின்றோம். இவர்களின் எந்தச் சீண்டல்களுக்கும் எடுபடாது எமது மக்கள் அமைதிகாத்து இலட்சியத்தை எட்ட உழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

### வாகனம்...

வினோதரன் (வயது 34) எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி வாகனத்தின் முன்சில்லு ஒன்று காற்று போனமையே தடம் புரளக் காரணம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு தமிழீழ காவல பணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

### குழு..

சோமசுந்தரம் (வயது42) நடராசா விநாயகமூர்த்தி (வயது47) விநாயகமூர்த்தி உதயகுமார் (வயது17) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். மேற்படி சம்பவம் பற்றி தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பி)

### பொலிசதிகாரி..

நிலையப் பொறுப்பதிகாரி செயற்படுவதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் சி.ஏ.எதிரிசிங்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதத்தையடுத்தே இவ் இடமாற்றம் இடம் பெற்றுள்ளது.

### முன்னாள்..

கைது செய்வதற்கோ துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கோ பொலிசார் முயற்சிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.சம்பவ நேரம் பொலிசார் ஆகாயத்தை நோக்கியே துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதுடன் நிறுத்திக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இதன் மூலம் கொலை முயற்சிக்கு பொலிசாரும் உடந்தையாக இருந்தார்களா என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)


# பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

எமது நிறுவனத்திற்கு கிளிநொச்சி நகர்ப் பகுதிக்கு பத்திரிகை விநியோகிப்பதற்கு விநியோகஸ்தர் தேவை.

அகவை :- 18-40 (ஆண்)


காலம் :- 02.04.2004 (வெள்ளிக்கிழமை)

நேரம் :- காலை.10.00 மணி

ஜெயந்திநகர்ப் பகுதியில் உள்ள ஈழநாதம் பணிமனைக்கு நேரில் சமுகம் தரவும்.

பொதுமுகாமையாளர்,
ஈழநாதம். (இ)


# சாவு அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1969 |  | 2004 |
| □ | | □ |
| 03 | | 03 |
| □ | | □ |
| 17 | | 27 |

## கந்தையா வினோதரன்

தெல்லிப்பளை கிழக்கை சொந்த முகவரியாகவும், குழந்தை யேசு கோயில் முன்பாக 5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வினோதரன் [கரிகாலன்] 27.03.2004 அன்று அகாலமரணமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன்னம்மாவின் அன்பு மகனும் வதனியின் அன்புக்கணவரும் சுப்பையா, சரோஜினிதேவி, கதிர்காமசேகரன், சிவகுமார், சந்திரசேகரன், சிவநேசன், சரஸ்வதி, யசோதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிறிரஞ்சன் இராசசுலோஜனா, சகுந்தலா தேவி, கிருஸ்ணவேணி, மோகனகௌரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 28.03.2004 இன்று பி.ப 2.00 மணிக்கு தகனக் கிரிகைக்காக பூதவுடல் இரணைப்பாலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குழந்தையேசு கோவில் முன்பாக,
5ஆம் வட்டாரம், இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு.

தகவல்:
வி.வதனி(மனைவி)

(4356)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.